

சென்னை, கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையக் கூட்டரங்கில், நேற்று (19.8.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறையில் புதியதாக பணியில் சேர்ந்துள்ள உதவிப் பொறியாளர்களுக்கு, சிறப்பாகப் பணி செய்யவேண்டும் என்பதற்காக அறிவுரைகள் வழங்கும் கலந்துரையாடலில் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் இரா.செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை திட்ட இயக்குநர் தெ .பாஸ்கரபாண்டியன், நெடுஞ்சாலைத்துறை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) தலைமைப் பொறியாளர் கு.கோ.சத்தியபிரகாஷ், பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் எஸ்.மணிவண்ணன், நெடுஞ்சாலைத்துறை சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர், நெடுஞ்சாலைத்துறை/ பொதுப்பணித் துறையை சேர்ந்த தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு சுற்றுலாத்துறைக்காக தயாரிக்கப்பட்ட

# ஆவணப்படத்திற்கு ‘ராஜத்கமல்’ விருது அறிவிப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பட நிர்வாகிகள் வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, ஆக. 20 -

தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்காக தயாரிக்கப்பட்ட “Timeless TamilNadu” என்ற ஆவணப் படத்திற்கு 71வது தேசிய திரைப்பட விருது பட்டியலில் சிறந்த கலை/பண்பாடுக்கான படத்திற்கான ‘ராஜத்கமல்’ விருது அறிவிக்கப்பட்டதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (19.8.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சுற்றுலாத்துறைக்காக தயாரிக்கப்பட்ட “Timeless TamilNadu” என்ற ஆவணப் படத்திற்கு 71வது தேசிய திரைப்பட விருது பட்டியலில் சிறந்த கலை/ பண்பாடுக்கான படத்திற்கான ‘ராஜத்கமல்’ விருது அறிவிக்கப்பட்டதற்காக செலிபிரிட்டி மேலாண்மை நிறுவனத்தைச் சேர்ந்த முதன்மை செயல் அலுவலர் பிரசாந்த் சோட்டாணி, நிறுவனர் மற்றும் இயக்குநர் திருமதி. நிஷா சோட்டாணி, இயக்குநர் காமக்யா நாராயன் சிங் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

முதலமைச்சர் அவர்களால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையிலும், தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்தவும், தமிழ்நாட்டை சர்வதேச அளவில் விரும்பத்தக்க சுற்றுலா மாநிலமாக மேம்படுத்துவதற்காகவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக கடந்த 2022 ஆம் ஆண்டு சுற்றுலாத் துறையின் நிதி உதவியுடன் “Timeless TamilNadu” என்ற ஆவணப்படம் செலிபிரிட்டி மேனேஜ்மென்ட் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தின் இயக்குனர் காமக்யா நாராயண சிங் அவர்கள் தலைமையில் தயாரிக்கப்பட்டது. இப்படமானது சென்னை மற்றும் மாமல்லபுரம், தஞ்சாவூர் மற்றும் நீலகிரி, திண்டுக்கல், கொடைக்கானல் மற்றும் மதுரை, காரைக்குடி மற்றும் இராமேஸ்வரம் போன்ற இடங்களில் ஒவ்வொரு இடத்திற்கும் 30 நிமிட காணொலியாக தயாரிக்கப்பட்டு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் டிராவல் எஃஸ்பி தொலைக்காட்சி சேனல்கள் மற்றும் சமூக ஊடகங்களில் காட்சிப்படுத்தப்பட்டு பெறும் வரவேற்பினை பெற்றுள்ளது.

இந்த ஆவணப்படம் 2023ஆம் ஆண்டிற்கான 71வது தேசிய திரைப்பட விருது பட்டியலில் திரைப்படங்கள் அல்லாத பிரிவின் கீழ் சிறந்த கலை/ பண்பாடுக்கான “Timeless TamilNadu” என்ற ஆவணப்படமாக தேர்வாகி “ராஜத்கமல்” என்ற விருதிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறையில் தமிழ்நாட்டை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்லும் நோக்கத்துடன் “தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை 2023” முதலமைச்சர் அவர்களால் 26.09.2023 அன்று முதன்முதலாக வெளியிடப்பட்டது. மேலும், தமிழ்நாட்டில் 2023 ஆம் ஆண்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கை 28.72 கோடி ஆகவும், 2024ஆம் ஆண்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கை 30.80 கோடி ஆகவும் கணிசமாக உயர்ந்துள்ளது.

இந்தியாவின் முன்னோடி சுற்றுலாத் தலங்கள் அதிகமுள்ள மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டில் பல்வகையான சுற்றுலா தலங்கள், பிரம்மாண்ட கோயில்கள், அழகிய மலை சுற்றுலாத் தலங்கள், வனவிலங்கு சரணாலயங்கள் மற்றும் கடற்கரைகள் போன்ற பல்வகைப்பட்ட சுற்றுலாத் தலங்களைக் கொண்டுள்ளது. அனைத்து சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் பல்வேறு இடங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.

இதுபோன்ற பல்வேறு குறும்படங்கள் சுற்றுலாத்துறை மூலம் தயாரிக்கப்பட்டு உள்நாடு மற்றும் வெளிநாடு சுற்றுலா LILLIGDOT சந்தைகள் மற்றும் விளம்பர முகாம்களில் விளம்பரப் படுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலமாக பல்வேறு மாநிலங்களிலிருந்தும் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது.

இந்த நிகழ்வின்போது, சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலை யங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பி. சந்திரமோகன், சுற்றுலாத்துறை இயக்குநர் தா. கிறிஸ்துராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் பொது மேலாளர் திருமதி ச. கவிதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### மேயர் ஆர்.பிரியா – ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பயனாளிகளுக்கு தீர்வுக்குரிய ஆவணங்கள் வழங்கினார்!

சென்னை, ஆக.20-

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால் தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் /திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய” போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் நேற்று அம்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் மண்டலம் 7 வார்டு 81 அம்பத்தூர் எஸ்.எம்.கே.திருமண மண்டத்தில் நேற்று (19.8.2025) செவ்வாய்க்கிழமை நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு பல்வேறு கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு குறிப்பாக மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம்..35 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும்





CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 164 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும்.

ஆதார் இணைய சேவைகள் மனு 70 பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி 13 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணப்பங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 60 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பட்டா நில அளவை மற்றும் பெயர் மாற்றுதல் 254 பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) ஓய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 200 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

ஆதரவற்ற குழந்தைகளுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் 8 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை/ மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை 3 விண்ணப்பம் பெறப்பட்டு தீர்வு கண்டும்

கலைஞர் மகளிர் உரிமை தொகை 1151 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

இதர மனுக்கள் 18 என மொத்தமாக 2283 மனுக்கள் பெறப்பட்டு அதில் 2154 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கி சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் நிகழ்வில் மேயர் பிரியா ராஜன், ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி. கே.மூர்த்தி, டாக்டர் ஜி.சாந்தகுமாரி, வட்டக் கழகச் செயலாளர் மு.இரகு மற்றும் 81 வது வட்டக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நேற்று (19.08.2025) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத் தலைவர். ராஜேந்திர ரத்னூ, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகத்தின் நிர்வாக இயக்குநர், கே.விவேகானந்தன், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம், மேலாண்மை இயக்குநர், ஹனிஷ் சாப்ரா, சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர், டாக்டர்.டி.ஜி.வினய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், ஜி.எஸ்.சமீரன், நகராட்சி நிர்வாக இயக்குநர், பி.மதுசூதன் ரெட்டி, பேரூராட்சிகளின் இயக்குநர், எம்.பிரதீப் குமார் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மேயர் ஆர்.பிரியா – தமிழன் பிரசன்னா பங்கேற்பு!

# எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பயனாளிகளுக்கு உரிய ஆவணம் வழங்கினார்!





சென்னை, ஆக.20

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால்

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய” போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று எழும்பூர் சட்டமன்ற தொகுதியில் மண்டலம் 6 வார்டு78 புரசைவாக்கம் பெரம்பூர் பேரக்ஸ்சாலையில் அமைந்துள்ள லட்சுமி மஹால் திருமண மண்டத்தில் நேற்று (19.8.2025) செவ்வாய்க்கிழமை நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு பல்வேறு கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு குறிப்பாக மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம், 13 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும் CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 215 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும், ஆதார் இணைய சேவைகள் மனு 80 பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி 9 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணப்பங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 9 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பட்டா நில அளவை மற்றும் பெயர் மாற்றுதல் 40 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) ஓய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 188 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும், ஆதரவற்ற குழந்தை களுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் 3 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும் மாற்றுத்திறனாளி களுக்கான தேசிய அடையாள அட்டை / மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை 3 விண்ணப்பம் பெறப்பட்டு தீர்வு கண்டும், கலைஞர் மகளிர் உரிமை தொகை 898 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும், இதர மனுக்கள் 111 என மொத்தமாக 1,801 மனுக்கள் பெறப்பட்டு அதில் 1,792 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கி சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் மேயர் பிரியா ராஜன், தமிழன் பிரசன்னா, எழும்பூர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் சொ.வேலு,செயல் பொறியாளர் சரவணன், வட்ட கழக செயலாளர்கள், சு மனோகர் ந.பாலு. தி.தயாளன், வி.அபாய், சி. சேகர், ஆர் . எம்.ரங்கநாதன் மற்றும் 78,78அ வட்டக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திருவள்ளூர் மேற்கு மாவட்டம் முழுவதும் கிளைக் கழகக் கூட்டங்கள்!

## மாவட்ட கழகச் செயலாளர் – திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திருவள்ளூர், ஆக.20-

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழகங்களில் உள்ள கிளைக் கழகம் கூட்டம் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறுகிறது. இன்று (20-08-2025) ஒன்றிய கழகச் செயலாளர் பா.ஆர்த்தி ரவி ஏற்பாட்டில் திருத்தணி கிழக்கு ஒன்றியத்தில் 21-08-2025 ஒன்றிய கழகச் செயலாளர் என்.கிருஷ்ணன் ஏற்பாட்டில் திருத்தணி மேற்கு ஒன்றியத்தில்22-08-2025 அன்று ஒன்றிய கழகச் செயலாளர் ஏ.எல்.விஜயகுமார் ஏற்பாட்டில்

திருத்தணி வடக்கு ஒன்றியத்தில் 23-08-2025 அன்று ஒன்றிய கழகச் செயலாளர் கே. ராஜேந்திரன் ஏற்பாட்டில் திருத்தணி தெற்கு ஒன்றியத்தில் 24-08-2025 அன்று ஒன்றிய கழக பொறுப்பாளர் பா சம்பத் ஏற்பாட்டில்

ஆர்கே பேட்டை கிழக்கு ஒன்றியத்தில் 25-08-2025 அன்று ஒன்றிய கழகச் பொறுப்பாளர் மா ரகு ஏற்பாட்டில் ஆர்கே பேட்டை மேற்கு ஒன்றியத்தில் 26-08-2025 அன்று ஒன்றிய கழகச் செயலாளர் சி என் சண்முகம் ஏற்பாட்டில் ஆர்கே பேட்டை வடக்கு ஒன்றியத்தில் 27-08-2025 அன்று ஒன்றிய கழக செயலாளர் பெ. பழனி ஏற்பாட்டில் ஆர்கே பேட்டை தெற்கு ஒன்றியத்தில் 28-08-2025 அன்று ஒன்றிய கழகச் செயலாளர் சி. ஜெ.சீனிவாசன் ஏற்பாட்டில்



பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியத்தில் 29-08-2025 அன்று ஒன்றிய கழகச் செயலாளர் ஜி.ரவீந்திரா ஏற்பாட்டில் பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றியத்தில் 30-08-2025 அன்று ஒன்றிய கழகச் செயலாளர் பி.டி.சந்திரன் ஏற்பாட்டில் பள்ளிப்பட்டு மத்திய ஒன்றியத்தில் 31-08-2025 அன்று பேரூர் கழக செயலாளர் சி. ஜெ. செந்தில்குமார் ஏற்பாட்டில்

பள்ளிப்பட்டு பேரூர் கழகத்தில் 01-09-2025 அன்று பேரூர் கழகச் செயலாளர் டி.ஆர்.கே பாபு ஏற்பாட்டில் பொதட்டூர்பேட்டை பேரூர் கழகத்தில் 02-09-2025 நகரக் கழகச் செயலாளர் வி. வினோத் குமார் ஏற்பாட்டில் திருத்தணி நகரக் கழகத்தில் 03-09-2025 அன்று நகரக் கழகச் செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன் ஏற்பாட்டில் திரு வள்ளூர் நகர கழகத்தில் 04-09-2025 அன்று ஒன்றிய கழகச்செயலாளர் டி.கிறிஸ்டி (எ)அன்பரசு ஏற்பாட்டில்

பூண்டி மேற்கு ஒன்றிய கழகத்தில் 05-09-2025 அன்று ஒன்றிய கழக செயலாளர் க.அரிகிருஷ்ணன் ஏற்பாட்டில் கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியத்தில் 06-09-2025 அன்று ஒன்றிய கழகச் செயலாளர் மோ.ரமேஷ் ஏற்பாட்டில் கடம்பத்தூர் மேற்கு ஒன்றியத்தில் 08-09-2025 அன்று ஒன்றிய கழகச் செயலாளர் எஸ் மகாலிங்கம் ஏற்பாட்டில்

திருவாலங்காடு கிழக்கு ஒன்றியத்தில் 09-09-2025 அன்று ஒன்றிய கழகச் செயலாளர் கூளூர் எம்.ராஜேந்திரன் ஏற்பாட்டில் திருவலாங்காடு மேற்கு ஒன்றிய கழகத்தில் கிளைக் கழக கூட்டங்கள் நடைபெறுகிறது.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் கழக கொள்கை பரப்புச் செயலாளரும் அரக்கோணம் நாடளுமன்ற உறுப்பினருமான டாக்டர்.எஸ்.ஜெகத் ரட்சகன், தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன், கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், கழக நெசவாளர் அணி துணைத்தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், திருத்தணி தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், திருவள்ளூர் தொகுதி பார்வையாளர் மாஸ்டர் பெ.சேகர், மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர்.இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர்.வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, பா.உதயமலர் பாண்டியன், எம்.மிதுன் சக்கரவர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.இராஜேஸ்வரி இரவீந்திரநாத், ஆகியோர் கலந்துக் கொள்கின்றனர். மேற்கண்ட கூட்டங்களில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட ஒன்றிய நகர பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளை கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் ஆங்காங்கே தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

1. கிளை கழக கூட்டங்கள் முறையாக நடத்திடவும் தீர்மானங்களை நிறைவேற்றிடவும் கேட்டுக் கொள்கிறேன்.

2. இக்கூட்டத்தின் நடவடிக்கைகளை மினிட் புத்தகத்தில் பதிவு செய்திட அதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் செய்திடவும் கேட்டுக் கொள்கிறேன்.

3. முடிவுபெற்ற கிளை கழக கூட்டங்களின் மினிட் புத்தகங்களை கூட்டம் முடிந்த அன்றே மாவட்ட கழகத்திடம் ஒப்படைத்திட கேட்டுக்கொள்கிறேன். என அறிக்கையின் வாயிலாக மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தெரிவித்துக் கொள்கிறார்.